**எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் எச்ஐவீ புதிய நிதியிடல் மாதிரிக் கூறு - 2017**

---

எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் எச்ஐவீ புதிய நிதியிடல் மாதிரி கூறின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 நவம்பர் 26 ஆம் திகதிய 977-எல்கேஏ-எச்-எம்ஓஎச் ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 13(ஆ) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் சுகாதார அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் நடவடிக்கைகளிற்குப் பொறுப்பாக உள்ளது. இலங்கையில் எச்ஐவீ/எயிட்ஸ் இனை தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் சிகிச்சையளித்தல் என்பவற்றிற்கான தேசிய நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். புதிய நிதியிடல் மாதிரிக்கான எச்ஐவீ/எயிட்ஸின் தீவிரத்தை கட்டுப்படுத்துவதற்கான செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 5,323,102 தொகையானதுடன் முழுத் தொகையையும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் புதிய நிதியிடல் மாதிரிக் கூறின் கீழான அதன் நடவடிக்கைகளை 2016 சனவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை

கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நிதியளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) மானிய உடன்படிக்கையின் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளிற்கிணங்க மீளளிப்புக்கான விண்ணப்பத்துடனான ஆதரவின் மீது சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) நியாயமாக தங்கியுள்ளது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கடப்பாடுகளுடன் இணங்கியுள்ளது என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் தகவல்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 250.08 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 1.64 மில்லியனானதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 426.17 மில்லியனாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டு செலவினம் பின்வருமாறு பொழிப்புக்கள் காட்டப்பட்டுள்ளது.

| வகை | திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | | | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|---|
| | 2017 | | 2016 | | |
| | ஐ.அ.டொலர் | ரூபா | ஐ.அ.டொலர் | ரூபா | ரூபா |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 125,779 | 19,031,556 | 59,415 | 23,567,844 | 42,599,400 |
| எச்ஐவீ/எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 1,515,474 | 231,049,381 | 1,045,856 | 152,517,188 | 383,566,569 |
| மொத்தம் | 1,641,253 | 250,080,937 | 1,105,271 | 176,085,032 | 426,165,969 |

### 2.2.2 காசுப்பாய்ச்சல் கூற்று

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றின் நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | | | |
|---|---|---|---|---|
| | 2017 | | 2016 | |
| | ஐ.அ.டொலர் | ரூபா | ஐ.அ.டொலர் | ரூபா |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| வெளிநாட்டு உதவி - மானியத்திலிருந்து பெறப்பட்ட காசு | 878,933 | 134,000,000 | 627,442 | 91,500,000 |
| உள்நாட்டு மூலங்களிலிருந்தான பெறுகைகள் | 193,904 | 29,562,062 | 89,145 | 13,000,000 |
| உலகலாவிய நிதியத்திலிருந்தான நேரடிப் மீளளிப்புக்கள் | 360,652 | 54,984,969 | 407,557 | 59,434,020 |
| ஏனைய மூலங்களிலிருந்து பெறப்பட்ட காசு | - | - | 288 | 42,000 |
| நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள் | (1,515,474) | (231,049,381) | (1,045,856) | (152,517,188) |
| **ஆண்டிற்கான மிகை/ (பற்றாக்குறை)** | **(90,955)** | **(13,866,957)** | **75,029** | **10,941,504** |
| பெறுமானத்தேய்வு | 73,328 | 11,179,613 | 77,656 | 11,324,518 |
| ஆண்டிற்கான பணிக்கொடை | 1,908 | 320,582 | - | - |
| செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு | 141,453 | 21,427,423 | 7,526 | 1,268,821 |
| இருப்புக்களில் அதிகரிப்பு | (191) | (29,105) | - | - |
| வருமதிகளில் அதிகரிப்பு | - | - | 224 | 33,000 |
| வெளிநாட்டுப் பரிமாற்ற நட்டம் | (732) | - | (1,020) | - |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | **133,781** | **20,396,163** | **(159,415)** | **(23,567,844)** |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் கூற்று | | | | |
| நிலையான சொத்துக்கள் பெறுகை | (124,830) | (19,031,556) | (159,415) | (23,567,844) |
| | (124,830) | **(19,031,556)** | **(159,415)** | **(23,567,844)** |

| | | | | |
|---|---|---|---|---|
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | | | | |
| நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் மீள் நிதியிடப்பட்ட காசு | (8,951) | (1,364,607) | (3,547) | (517,328) |
| | ---------------- | ----------------- | ---------------- | ----------------- |
| **நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(8,951)** | **(1,364,607)** | **(3,547)** | **(517,328)** |
| | ======== | ======== | ======== | ======== |
| காசில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடு

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் எச்ஐவீ/எயிட்ஸ் புதிய நிதியிடல் மாதிரிக் கூறின் நடவடிக்கைகள் 2016 சனவரி 01 இலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னைய செயற்திட்டத்தால் 2015 திசெம்பர் 31 வரை ரூபா 69.99 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு வரிசை அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன செயற்திட்டதின் சொத்துக்களாக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 134 மில்லியன் தொகையை இலங்கை அரசாங்கம் பங்களித்திருந்த போதிலும், இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பாக ரூபா 132.64 மில்லியன் தொகை வருமானக்கூற்றிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

### 2.2.4 இணக்கஞ் செய்யப்படாத மீதிகள்

பொதுத் திறைசேரியால் பேணப்பட்ட பதிவேடுகளுடன் செயற்திட்டத்தின் நிதித் தகவல்களுடன் இணக்கஞ் செய்வதற்கு செயற்திட்ட கண்காணிப்பு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 54.98 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 360,652 நேரடி மீளளிப்பு பொது திறைசேரியால் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 15 பாதீட்டு வரிசை நடவடிக்கைகளின் கீழ் 40 சதவீதத்திலிருந்து 100 சதவீத வீச்சு வரையிலான பௌதீக செயன்முன்னேற்றம் அடையப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 39.4 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எனினும், ஒவ்வொரு நடவடிக்கைகளின் கீழான இலக்குகளை அடைதல் தொடர்பான விபரங்கள் அளவிடப்பட்டிருக்காததுடன் செயன்முன்னேற்ற அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்தது. மேலும், வேலை மற்றும் சேவைகளின் பெறுகை அதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு விபரங்கள் போன்ற தகவல்கள் உரிய கோவைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) ஈஎம்ஐஎஸ் முறைமைக்கான ரூபா 3.84 மில்லியன் கிரயத்திலான 35 கணனிகளின் பெறுகை தொடர்பிலான தொடர்பாடல் கோவைகள், பௌதீக ரீதியில் சரிபார்த்தல் அறிக்கைகள் போன்ற சான்றுகள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(இ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ஒருங்கிணைக்கப்பட்ட விஞ்ஞான மற்றும் நடத்தை ரீதியான கண்காணிப்பு ஆய்வின் கீழான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எனினும், ஏற்றுக்கொள்ளல் கடிதத்தின் பிரதிகள், அளவை அறிக்கை மற்றும் அமைச்சரவையின் அனுமதி கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

### 2.2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

ரூபா 100,000 அதிகூடிய எல்லையை விஞ்சி ரூபா 8.93 மில்லியன் கூட்டுத்தொகையான செயல்நிமித்த உபகட்டுநிதி நிதிப்பிரமாணம் 371(5) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 26 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தது. மேலும், 42 சந்தர்ப்பங்களில் விடுவிக்கப்பட்ட ரூபா 4.35 மில்லியன் கூட்டுத்தொகையான உபகட்டுநிதி 01 கிழமையிலிருந்து 03 மாதங்கள் வரையிலான வீச்சு காலப்பகுதியுடனான காலதாமதங்களுடன் 42 சந்தர்ப்பங்களில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு மற்றும் திரண்ட பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட நிதிகள் | | 2017 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜீஎவ்ஏரீஎம் | 5.32 | 707.56 | 222.5 | 1.23 | 187.62 | 2.14 | 320.5 |
| ஜீஓஎஸ்எல் | - | - | - | 0.19 | 29.56 | 0.28 | 42.56 |
| மொத்தம் | 5.32 | 707.56 | 222.5 | 1.42 | 217.18 | 2.42 | 363.06 |

மேற்படி தகவல்களின் பிரகாரம், கூறிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 707.56 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 5.32 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 40 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 320.50 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 2.14 மில்லியன் மாத்திரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் திறைசேரி அறிக்கைகளின் பிரகாரம், உலகளாவிய நிதியத்தின் மீளளிக்கப்பட்ட ரூபா 9.87 மில்லியன் பயன்படுத்தப்படாத மீதி 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது திறைசேரியிலிருந்தது.

### 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

13 பாதீட்டு கிரய வகைப்படுத்தல்களின் கீழுள்ள 213 பாதீட்டு வரிசை நடவடிக்கைகளினூடாக அமுல்படுத்துவதற்கு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 18 பாதீட்டு வரிசை நடவடிக்கைகள் அமுல்படுத்தாமையால் அதன்மீது மேற்கொள்ளப்பட்ட ரூபா 56.65 மில்லியன் தொகையான ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. மேலும், செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 40 சதவீதத்தை விட குறைவாகவிருந்தது. எனினும், பாதீட்டு வரிசை நடவடிக்கைகளின் கீழ் அமுல்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் செயற்திட்டத்தால் பராமரிக்கப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றம் தொடர்பிலான அறிக்கைகள் இன்மையால் கணக்காய்வில் சரியாக தீர்மானிக்க முடிந்திருக்கவில்லை. மேலதிக அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 10 பாதீட்டு வரிசை நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தியாக்கப்பட்டிருந்தது என செயன்முன்னேற்ற அறிக்கைகள் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உண்மையான செயன்முன்னேற்றம் 10 சதவீதத்திலிருந்து 70 சதவீத வீச்சிலிருந்தது. அதற்கு மேலதிகமாக ரூபா 166.7 மில்லியன் கிரயத்தில் அமுல்படுத்தப்பட்ட ஏனைய 99 பாதீட்டு வரிசை நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் செயற்திட்டத்தால் தனித்தனியாக மதிப்பிடப்பட்டு செயன்முன்னேற்ற அறிக்கைகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 08 பாதீட்டு வரிசை நடவடிக்கைகளின் கீழான இலத்திரனியல் தகவல் முறைமையொன்றின் அபிவிருத்திக்காக ரூபா 5.82 மில்லியன் தொகை செலுத்தியிருந்ததுடன் அதில் 06 பாதீட்டு வரிசை நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைவாகவிருந்தது. மேலும், ரூபா 17.55 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டின் கீழான இலத்திரனியல் தகவல் முறைமையொன்றினை வடிவமைத்து அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் 70 சதவீத பௌதீக செயன்முன்னேற்றம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பட்டிருந்தது என அறிக்கையிடப்பட்டது. எனினும், அதன் மீது அடையப்பட்ட செயன்முன்னேற்றத்தை நிரூபிப்பதற்கு தேவையான தகவல்கள் உரிய கோவைகளில் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

### 3.3 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பதிவு செய்யப்பட்ட செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அளவு சபையொன்று நடாத்துவதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டத்தால் நிறுவனத்திற்கு மாற்றப்பட்ட சொத்துக்களின் பயன்படுத்துவது தொடர்பிலான செயன்முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளிவாரி வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் முன் அங்கீகாரமானது எச்ஐவீ / எயிட்ஸ் கூறின் கீழ் பெறப்பட்ட மானியங்கள் மீது நிதிப்பிரமாணம் 610 இன் பிரகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்

10 செயற்பாட்டு ஒருங்கிணைப்பாளர்கள் பதவிகளுடன் செயற்திட்டத்தின் பதவியணி உள்ளடக்குவதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 பதவிகள் 02 வருடங்களுக்கு மேலாக வெற்றிடமாகவிருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 3.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவை ஒழிப்பதற்கான உலகலாவிய நிதியத்தின் எச்ஐவீ புதிய நிதியிடல் மாதிரி செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச முருத்துவ அமைச்சுக்கு தனிப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்டு அதன்மீது முனைப்பழியுள்ள அபிப்பிரயாம் வழங்கப்பட்டது. எனினும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அனுமதி அதன் மீது வேண்டப்பட்டிருக்கவில்லை.